<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 28.08.2025

**அசல் வழக்கு எண்.212/2019**

**வா.சா.1 – ரவி, த/பெ.லோகைய நாயுடு**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

நீங்கள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என்னுடைய தாத்தா சொத்து பங்கு வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து பூர்வீக சொத்தாகும். உங்கள் தாத்தாவின் பெயர் என்ன என்றால் அவருடைய பெயர் கண்ணையா நாயுடு ஆகும். கண்ணையா நாயுடு உங்கள் தாத்தா எந்த வருடம் இறந்துவிட்டார் தெரியுமா என்றால் தெரியாது. கண்ணையா நாயுடுவிற்கு எத்தனை மகன்கள் எத்தனை மகள்கள் என்றால் இரண்டு மகன் மட்டுமே இருந்தார்கள். மகள் யாரும் இல்லை. அந்த 2 மகன்கள் பெயர் தெரியுமா என்றால் ஒன்று நாராயணசாமி நாயுடு இரண்டு லோகைய நாயுடு என்னுடைய அப்பா ஆவார். உங்கள் தகப்பனார் லோகைய நாயுடு இறந்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது நீதிமன்றத்தில் சொல்லி உள்ளேன். தற்பொழுது மறந்துவிட்டது. உங்கள் அப்பா லோகைய நாயுடுவுக்கு பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அவருக்கு பிறந்தவர்கள் 5 நபர்கள் ஆவார்கள். கன்னியம்மாள், சுலோச்சனா, கௌசல்யா, சீனிவாசன், ரவி ஆகிய நான் ஆகிய ஐந்து பேர் பிள்ளைகள் ஆகும். வழக்கு சொத்து சர்வே நம்பர் என்ன என்றால் சர்வே எண் 80 ஆகும். பட்டா எண் 371 ஆகும். சுமார் 2 ஏக்கருக்கு அதிகமாக இருக்கும். சர்வே எண் 80 மட்டும்தானா அல்லது உட்பிரிவு ஏதேனும் இருக்கிறதா என்றால் சர்வே எண் 80 மட்டுமே சரியானது ஆகும். வழக்கு சொத்தில் லே அவுட் செய்கிறார்கள் என்றுதான் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். எந்த வருடம் எந்த மாதம் எந்த தேதி லே அவுட் போட்டார்கள் என்றால் 2019 ஆம் ஆண்டு போட்டார்கள் மாதம் தேதி தெரியாது. லேஅவுட் போட்டது உங்களுக்கு தெரியுமா தெரியாதா என்றால் தெரியாது. தெரிய வந்த பிறகு தான் புகார் கொடுத்தேன். எப்பொழுது எந்த வருடம் தெரிய வந்தது என்றால் தெரியாது. புகார் யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் காவல் நிலையத்தில் கொடுத்தேன். எப்பொழுது கொடுத்தீர்கள் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் எந்த

ஒரு புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை ஆனால் காவல் நிலையத்தில் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வட்டாட்சியரிடம் ஏதேனும் புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2019 ஆம் ஆண்டு லே-அவுட் போட்டதாக சொல்வது தவறு லேஅவுட் ஆனது 2006 ஆம் ஆண்டு போடப்பட்டது என்றால் தெரியாது. 2006 ஆம் ஆண்டு லே-அவுட் போடப்பட்டது அந்த விவரங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் சரியில்லை. என் அண்ணன் இறந்து விட்டதால் சற்று காலதாமதம் ஆகிவிட்டது. இந்த வழக்கில் எஸ் டி. சுந்தரம் என்கிறவர் ஒருவர் இருக்கிறார் அவர் யாரென்று தெரியுமா என்றால் தெரியாது. நாராயணசாமி நாயுடு யார் என்று தெரியுமா என்றால் அவர் என்னுடைய பெரியப்பா ஆவார். நாராயணசாமியின் வளர்ப்பு மகன் தான் எஸ் டி சுந்தரம் என்றால் சரியில்லை. சிட்டிபாபு மட்டுமே அவருடைய மகன் ஆவார் அது மட்டுமல்லாமல் இரண்டு மகள்கள் சகுந்தலா மற்றொரு மகள் பெயர் ஞாபகம் இல்லை அவர் இறந்துவிட்டார். உங்கள் பெரியப்பா நாராயணசாமி நாயுடு எஸ்டி சுந்தரம் என்பவரை வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டதால் வளர்ப்பு மகன் என்கிற அடிப்படையில் வாய்மொழியாக சர்வே எண் 80 ல் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டார் என்றால் சரியில்லை. மேற்படி எஸ் டி சுந்தரம் 10 ஆண்டுகளாக சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்ததற்கான அனுபவ சான்றிதழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. சிட்டிபாபு என்பவர் அதாவது உங்கள் பெரியப்பா மகன் விமலா கிருஷ்ணசாமி என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்துவிட்டார் தெரியுமா என்றால் தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.